நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை–5
முன்னிலை:- டாக்டர். ப. செந்தில்குமார், இ.ஆ.ப.,

ந.க.எண். 39894/09/எப்3 நாள்: 07 .10. 2009

பொருள்: பணிக்குழு – திருவொற்றியூர் நகராட்சி– பொறியியல் பிரிவு– திரு ஆர். சிவக்குமார், மின்பணியாளர் நிலை I -க்கான முதுநிலை பட்டியலில் தனது பெயரை சேர்க்கக் கோருவது – ஆணை வழங்குவது – தொடர்பாக.

பார்வை:

1. நகராட்சி ஆணையர், திருவொற்றியூர், கடித எண். 492/09/இ3, நாள் 21.08.09.
2. திரு. ஆர். சிவக்குமார், மின்பணியாளர் நிலை I திருவொற்றியூர் மனு நாள். 20.08.09.

***

ஆணை

1. திருவொற்றியூர் நகராட்சியில் பணிபுரியும் திரு. ஆர். சிவக்குமார், மின் பணியாளர் நிலை I, 31.05.06 முதல் மின் பணியாளர் நிலை I க்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார். இதற்கான பதிவுகள் அன்னாரின் பணி பதிவேட்டில் பதியப்பட்டுள்ளதை சரிபார்க்கப்பட்டது.

2. மின் பணியாளர் நிலை I க்கான இறுதி முன்னுரிமை பட்டியல் ஏற்கனவே இவ்வலுவலக கடித எண் 31534/06/எப்3 நாள் 11.06.2007 வெளியிடப்பட்டு அதில் அன்னாரின் பெயர் விடுபட்டுள்ளது.

3. மேற்கண்டவற்றை பரிசீலனை செய்ததில் திரு. ஆர். சிவக்குமார், மின் பணியாளர் நிலை I பதவி உயர்வு பெற்ற 31. 05. 06 தேதியின்படி அன்னார் மின்பணியாளர் நிலை Iக்கான இறுதி முன்னுரிமை பட்டியலில் வரிசை எண் 35–ல் இடம் பெற்றுள்ள திரு. பி. ஆறுமுகம் மற்றும் வரிசை எண் 36–ல் இடம் பெற்றுள்ள திரு. எஸ். திருவேங்கடம் இடையே திரு. ஆர். சிவக்குமார் மின் பணியாளர் நிலை I பெயரினை 35 A என சேர்க்கத் தகுதி உடையவராகிறார்.

4. இதன்படி திரு. ஆர். சிவக்குமார், மின்பணியாளர் நிலை I க்கான இறுதிமுன்னுரிமைப் பட்டியலில் வரிசை எண் 35A ஆக அன்னாரின் பெயரினை சேர்த்து ஆணையிடப்படுகிறது.

5. இதற்கான ஆட்சேபனை ஏதேனும் இருப்பின் இச்செயல்முறை ஆணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. இச்செயல்முறை ஆணை பெற்றுக் கொண்டதற்கு ஏற்பளிப்பு உடன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஒம்/—வெ.பிச்சை
நகராட்சி நிர்வாக இயக்குநருக்காக.

பெறுநர்

1. திரு. ஆர். சிவக்குமார், மின் பணியாளர் நிலை I.
   திருவொற்றியூர் நகராட்சி ( நகராட்சி ஆணையர், திருவொற்றியூர் மூலமாக)
2. திரு. எஸ். திருவேங்கடம், மின்பணியாளர் நிலை I,
   அரக்கோணம் நகராட்சி.
3. திரு. எம். ரங்கசாமி, மின்பணியாளர் நிலை I,
   கரூர் நகராட்சி.
4. திரு. வி. மணிமாறன், மின் பணியாளர் நிலை I,
   கரூர் நகராட்சி.

நகல்
மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்,
செங்கல்பட்டு.
நகராட்சி ஆணையர், திருவொற்றியூர்/அரக்கோணம்/கரூர்
எப்2 உதவியாளர்.
ITS for hoasting website -

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

தே.நி. கண்காணிப்பாளர்.